கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை: 03/2015

எனது இல: NP/10/03/COM/CIR/2015
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
2015.04.29

வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் தலைவர்கட்கும்

## பதிற் கடமை நியமனம்

பதிற் கடமை நியமனம் தொடர்பான பின்வரும் விதிமுறைகள் 2015.05.02 முதல் செயற்பாட்டுக்கு வருவனவாக அமையும்.

1. ஏதேனும் பதவியொன்றில் வெற்றிடம் ஏற்படுமிடத்து அவ் வெற்றிடத்தை இயன்ற வரை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
2. வெற்றிடத்தை உரிய முறையில் நிரப்புவதற்குக் குறிப்பிட்ட காலத்தை செலவிட வேண்டுமாதலால் பதிற் கடமையாற்றுவதற்குத் தகைமையுடைய நிரந்தர ஊழியர் ஒருவரைச் சங்கத்தின் நிருவாக சபை / இயக்குநர் சபை நியமிக்கலாம்.
3. பதிற் கடமை நியமனம் பெறும் ஊழியர் பதிற் கடமைக்கான பதவிக்குரிய தகைமையைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே மட்டத் தகைமை பெற்ற ஊழியர்கள் பலர் உள்ளவிடத்து அதிசிரேட்ட ஊழியரைப் பதிற் கடமைக்காக நியமித்தல் வேண்டும்.
4. ஏதேனும் பதவியொன்றில் பதிற் கடமையாற்றும் கால எல்லை 06 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இக்காலத்திற்குள் பொருத்தமான ஒருவரை அப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.
5. தவிர்க்க முடியாத காரணங்களால் 06 மாத எல்லைக்குள் பொருத்தமான ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யமுடியாதவிடத்து மாத்திரம், அதற்கான காரணங்களை தெரிவித்து பதிற் கடமை நியமன நீடிப்புக்கான அனுமதியை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இந் நியமன நீடிப்பு விண்ணப்பங்களைச் சங்கம் அமைந்துள்ள மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபாரிசுடன் அனுப்புதல் வேண்டும்.

2015.04.28 ஆம் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானப்படியானது.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை